# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**

**CC. No.1321/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சிகப்பி | க–பெ | கருப்பையா |
| ஊர்: | : | சின்னவடகுடி பட்டி | | |
| வயது: | : | 75/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுகுடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026**

**எதிரிகள் ஆஜர் .**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தற்சமயம் வழக்கு குறித்து ஆஜர் எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். **சமாதான மனுவில் உள்ள கைரேகை அசாஆ1.** ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவருடன் தற்சமயம் சமரசம் செய்து கொண்டுள்ளேன். சம்பவ சமயத்தில் எதிரிகள் மீது இருந்த காழ்புணர்ச்சி காரணமாக புகார் அளித்து விட்டேன். மற்றபடி வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. எதிரிகள் சம்பவ சமயத்தில் என்னை கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டவில்லை அடிக்கவில்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் கடந்த 12.08.2020 அன்று இரவு 7.00 மணியளவில் தன்னுடைய மகன் ராமசந்திரன் என்பவர் வீட்டின் முன்பு நின்று பேசிக்கொண்டிருந்தபோது பாண்டியன் என்பவர் அங்கு வந்து முன் விரோதத்தை மனதில் வைத்து கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டி கையில் வைத்திருந்த கத்தியால் தனது மகனின் முதுகு மற்றும் தோள்பட்டை ஆகிய பகுதிகளில் குத்தி காயம் ஏற்பட்டதாகவும் எதிரிகள் அங்கு இருந்ததாகவும் பின்னர் 108 ஆம்புலன்ஸில் காயம் பட்ட தனது மகனை அரசு மருத்துவமனை திருமயத்திற்கு அனுப்பி வைத்ததாகவும்

பின்னர் காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்துவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.10 17:41:02 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.